யாழ்ப்பாணம்

Registered as a News Paper பக்கங்கள் 8 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

NAATHAM Peoples Daily மக்கள் தினசரி

04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 18 [01 - 3 - 1993] திங்கட்கிழமை ஓசை 11

## வெளி. அமைப்புகளை திருப்தி செய்யும் முயற்சி

சிறிலங்கா அரசாங்கம் உள்நாட்டு மககளை திருப்திப் படுத்துவதில் அக்கறை செலுத்தாது வெளிநாட்டு மனித உரிமை நிறுவனங்களை திருப்தி செய்வதிலேயே காலத்தைச் செலவிடுகிறதென ''ஏசியாவீக்'' சஞ்சிகை தெரிவித்துள்ளது. இன்று இவ்விடயம் சிறிலங்கா அரசின் முக்கிய கடமையாக உள்ளது எனவும் அது தெரிவித்தது. மகிழடித்தீவில் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக சிவில் விசாரணை (8ஆம் பக்கம் பார்க்க)

# ...ந்திய - சிறிலங்கா கடற்படைகள் ...க்கு நீரிணையில் கூட்டு ரோந்து

## ...ஐ. நா. பிரதிநிதிகள் ...லிகளுடன் பேசுவர்

(...காழும்பு)

...ப் புலிகளுடன் ...தை நடத்துவதற் ...ய நாடுகள் அகதி ... உயர்ஸ்தானிகரா ...திகள்குழுவொன்று ...ம் சென்றிருப்ப ...ம்புப் பத்திரிகை ...சய்தி வெளியிட் ...

...ா கிளாலி கடல் நீரேரிப் பகுதியில் பொது மக்களின் போக்குவரத்திற்கு அனுமதி எதுவும் வழங்கப்பட மாட்டாது என அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அப்பகுதியில் கண்காணிப்பை வலுப் படுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அச் செய்தி தெரிவிக்கின்றது.

## ...ரிவுக்குழு அறிக்கை ...த மாதம் வெளிவரும்

(...ழும்பு)

...ன் இனப் பிரச் ... ஆராய்ந்து அறி ...ினை பாராளு ...வுக்குழு அடுத்த ... சமர்ப்பிக்க ... இலங்கை இந்து ...சார அமைச்சர் ...தவராஜ் தெரிவித் துள்ளார்.

கொழும்பில் செய்தியாளரிடையே பேசிய அவர் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தவிர வேறு எந்தக் கட்சியும் அறிக்கை சமர்ப்பிக்குமிடத்தில் இவ்வறிக்கையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

## ...ாகிஸ்தான் ஆயுதம் ...லிகளுக்கு வந்ததா?

### ஆராய சிறிலங்கா உத்தரவு

(...காழும்பு)

...ட்டு பயணம் ...ில் இருந்ததாகக் ...யுதங்கள் பாகிஸ் ...ள்வனவு செய்யப் பட்டவையா என்பதை கண்டறியும் முகமாக விசாரணை ஒன்றை நடத்துவதற்கு சிறிலங்கா அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் கிட்டு பாகிஸ்தானில் காணப்பட்டாரென அங்குள்ள சிறிலங்கா தூதுவரகம் உறுதி செய்திருப்பதாகவும், ஆயுதங்கள் கொள்வனவு செய்யும்நோக்கத்துடன் அவர் சென்றிருக்கலாமென அதிகாரிகள் கருதுவதாகவும் கூறப்படுகின்றது.

இதனிடையே புலிகள் தெற்காசிய தலைமைபீடத்தை மியான்மார் தலைநகரமான ரங்கூனுக்கு மாற்றியிருப்பதாகவும், கிட்டு ரங்கூனிலிருந்து தான் கப்பலில் ஏறியிருந்ததாகவும் லங்கா புவத் செய்தி வெளியிட்டுள்ளது.

## ...ச்சாவு

### ...ம் லெப். ...ளிதாஸ்

(...டக்களப்பு)

...களப்பு திகினி ... எனும் இடத்தில் ...தினம் சிறிலங்கா ...தினருக்கும் விடு ...லிகளுக்குமிடையில் ...ற எதிர்பாராத ... விடுதலைப் புலிகள் ...ஒருவர் வீரச்சா ...ர்.

(... பக்கம் பார்க்க)

## மேயில் ஒப்பந்தம் கைச்சாத்தாகலாம்

(கொழும்பு)

இந்திய - சிறிலங்கா கடற்படைகள் இணைந்து பாக்கு நீரிணைப் பகுதியில் கூட்டு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும், இது குறித்து மே மாதத்தில் இரு ஒப்பந்தங்கள் கொழும்பில் கைச்சாத்தாகலாம் எனவும் கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அப்பத்திரிகையில் ஆயுதக் கடத்தலை தடுக்கவும், இரு நாடுகளினதும் மீனவர் ப்ரச்சினையைத் தீர்க்கவும்சிறிலங்காவும்-இந்தியாவும் பாக்குநீரிணையில் நெருக்கமாக இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதற்காகவே இரண்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள தினேஷ் சிங் எதிர்வரும் மே மாதத்தில் கொழும்பு வரும்போது இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சிறிலங்கா-இந்திய ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தில் கலந்துகொள்ளும் இந்திய தூதுக்குழுவிற்கு தலைமையேற்று தினேஷ்சிங் மே மாதத்தில் கொழும்பு வருவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## சிறிலங்கா - இந்திய உறவு நெருக்கமடைந்துள்ளது

### சிறிலங்கா பதில் தூதுவர் தெரிவிப்பு

(டில்லி)

சிறிலங்கா - இந்திய உறவு அண்மைக்காலமாக வலுப் பெற்று வருவதாக புதுடில்லியிலுள்ள சிறிலங்காபதில் தூதுவர் பீ. அதுகொட தெரிவித்தார். இரண்டு நாடுகளினதும் தலைவர்களின் சந்திப்புக் களைத் தொடர்ந்து இந்நாடுகளிடையே உள்ள உறவுநிலைகளிலிருந்த விரிசல் குறைவடைந்து வருகின்றது என்றும், சிறிலங்கா இந்தச் சந்தர்ப்பத்தை மிகுந்த அவதானத்துடன் பயன்படுத்துவ ( 8 ஆம் பக்கம் பார்க்க )

## ஜனாதிபதி பாதுகாப்பு அரண் மீது அம்பாறையில் தாக்குதல்

அம்பாறை தங்கவேலாயுதபுரம் பகுதியில், சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் வருகையையொட்டி பெருமளவில் குவிக்கப்பட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் மீது தமிழீழவிடுதலைப்புலிகள் கடும்தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர் ஜனாதிபதிபிரேமதாசாவின் அம்பாறை வருகையை முன்னிட்டு இப் பகுதியில் பெருமளவில் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இவ்விசேட அதிரடிப் படையினர் மீதான தாக்குதல் 20 நிமிடநேரம் நீடித்தது இத்தாக்குதலில் விசேட அதிரடிப்படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## அம்பாறை சிறப்பு பொறுப்பாளர், பொறுப்பாளர் வீரச்சாவு

(அம்பாறை)

அம்பாறை தங்கவேலாயுதபுரம் பகுதியில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் வருகைக்கென காவலில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளுக்கும் இடையில் கடந்த சனியன்று ஏற்பட்ட மோதலில் அம்பாறை பொறுப்பாளர் மேஜர் ராஜேஸ் (செல்வராசா குவேந்திரராஜா, திருக்கோவில், அம்பாறை) வீரச்சாவடைந்தார்.

இம்மோதலில் விழுப்புண் அடைந்திருந்த அம்பாறை விசேட பொறுப்பாளர் மேஜர்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## ...500 பீப்பா மண்ணெண்ணெய் இவ்வார இறுதியில் வரும்

...பில் இருந்து எதிர் ... தாம் திகதி பருத் ...துறைமுகத்தை வந் ...என்று எதிர்பார்க் ...'நில்கிரி'' என்ற ...மார் 1500 பீப்பா ...ணெய் மட்டுமே எடுத்துவரப்படவுள்ளது.

கொழும்பிலிருந்து நேற்று மாலை எமக்கு கிடைத்த தகவலின்படி மேற்படி கப்பலில் சுமார் 1500 பீப்பா மண்ணெண்ணெய் மட்டுமே ஏற்றப்பட்டு வருவதாக தெரிய வருகிறது.

அரசு முன்னர் அறிவித்தபடி 2000பீப்பா மண்ணெண்ணெய் எடுத்துவருவதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிய வருகிறது. (க),(நி)

## கிளாலி பகுதி நோக்கி அகோர எறிகணை வீச்சு

(கிளாலி)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து கிளாலிக் கடற்கரைப் பகுதிகளை நோக்கி அகோர ஆட்லறி எறிகணைத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

நேற்று மாலை 7.00 மணி முதல் இத் தாக்குதல் நடாத்தப்பட்டதாக தெரியவருகிறது.

அதேவேளை நேற்று முன்தினம் புதுக்காடு ஆலங்கேணிப் பகுதிகளைநோக்கியும் எறிகணைத்தாக்குதல் நடாத்தப் பட்டுள்ளது. (86)

## உளவாளிகள்!!! அவதானமாக இருக்கவும்...!

எந்த இடத்திலும், எட்டப்பன் நிற்பான்!
கண்டபடி கதைக்காதீர்.

## ஈ. பி. டி. பி. - அரசின் கூற்றில் உண்மையில்லை

### பி. பி. சி. செய்தியாளர் தெரிவிப்பு

[கொழும்பு]

சுமார் 75 ஆயிரம் தீவகப் பகுதி மக்களை யாழ். குடாநாட்டிற்குள் விடுதலைப் புலிகள் தடுத்து வைத்துள்ளனர் என்ற ஈ. பி. டி.பியினரின் குற்றச்சாட்டை பி.பி.சி. செய்தி

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### அறிவித்தல்

றெட் றோஸ் பாம் (Red Rose Farm) பராமரிக்க ஆள் தேவை. விண்ணப்பம் 10-3-93 வரை நீடிக்கப்பட்டுள்ளது. N. லட்சுமி, கெருடாவில்) தொண்டமானாறு. (4367

### சேவை

றொனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாக வழங்கப்படும், இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ். தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4347)

### திருக்கணித பஞ்சாங்கம்

ஸ்ரீமுகபுதுவருட(1993-1994) திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. விலை ரூபா 65-00 வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் உண்டு. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3381)

### அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று (3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமை சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஒட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள். (சி-6063)

### பாடல் பதிவு

நீங்கள் விரும்பும் பாடல்களை இப்போது கொம்பக்ட் டிஸ்க் மூலம் பதிவு செய்து பெற்றிட இன்றே வாருங்கள் ஷண் றெக்கோடிங் ஸ்பொட், பஸ்நிலைய வயிரவர் கோவில் அருகாமையில், நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். (4068)

# கட்சித் தலைமை கைப்பற்ற காமினி இரகசியத் திட்டம்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான காமினி திசநாயக்கா அக்கட்சியின் தலைமைப் பதவியைப் பிடிக்க முயற்சி செய்து வருவதாகக் கூறப்படுகிறது. ஜாதிக சேவா சங்கமவின் முன்னாள் தலைவர் எப். ஜி. மென்டிஸ் என்பவருடன் இணைந்து செயற்திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருவதாகவும், இது கட்சிக்குள் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

# பொன் விழா சுற்றுப் போட்டிகள்

இவ் வருடம் பொன்விழா காணும் வல்வெட்டித்துறை சனசமூக சேவா நிலையம் வல்வை விளையாட்டுக்கழக அனுசரணையுடன் மாபெரும் சுற்றுப்போட்டிகளை நடாத்தவுள்ளது.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப் பாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுப் போட்டிகளை வல்வெட்டித்துறை விளையாட்டு மைதானங்களில் மார்ச் மாதம் 5ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 14ஆம் திகதி வரை நடாத்தவுள்ளது.

## 45-ம் நாள் நினைவுதினம்



### லெப். கேணல் குட்டிசிறீ

[இராசையா சிறீகணேசன்]

கிட்டண்ணா பாசறையில் கீர்த்திகள் பல பெற்றாய்
கட்டிய பயிற்சியிலே களம்பல நீ வென்றாய்
குருகடன் நீ கொண்டாய் - ஈற்றில்
கூடி நின்றே அவருடன் எங்கு சென்றாயோ?

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (4359)

டாக்டர் இராசையா
குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம்... 1993-3-01

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பில் கல்லடி முகாம் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக் கொல்லப்பட்ட வவுணதீவைச் சேர்ந்த 5 தமிழர்கள்.

திருமலை - மூதூர், கட்டைபறிச்சான் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மட்டு - புல்லுமலைப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**கரன்** (ஞானசேகரம் பாஸ்கரன் - செங்கலடி, ஏறாவூர்- மட்டு.)

பொலநறுவையிற் சிங்களக் காடையர்களினாற் படுகொலை செய்யப்பட்ட 16 தமிழர்கள்.

திருமலையிற் பரீட்சைக்காக வந்தபோது தேசவிரோதக் குழுவினராற் சுட்டுக்கொல்லப்பட்ட க. பொ. த. (சா/த) மாணவர்களான 2 தமிழிளைஞர்கள்.

யாழ் - பருத்தித்துறை - கந்தமுருகேசனார் வீதி, புத்தூர்ச்சந்தி ஆகிய பகுதிகளில் இந்தியப்படையினராற் சுட்டுக்கொல்லப்பட்ட குடத்தனை, அல்வாய்ப் பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு யாழ் - மாவிட்டபுரம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சந்திரன்** (சின்னப்பு குணசேகரம் -பாரதிபுரம்மேற்கு)

யாழ் - வீமன்காமம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட எறிகணை வெடி விபத்தில் எமைப்பிரிந்த

**ரகீம்** (இராசதுரை கருணாகரன் - அராலி வடக்கு, வட்டுக்கோட்டை - யாழ்.)

1992ஆம் ஆண்டு வவுனியாவில் பல்வேறு முனைகளிலிருந்தும் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட கடுந்தாக்குதல்களின் போது தவசியாகுளம் பகுதியில் நிகழ்ந்த சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் காண்டீபன்** (கணபதிப்பிள்ளை நாகரத்தினம் - சாஸ்திரிகூழாங்குளம் - வவுனியா)

யாழ் - கொடிகாமம், மீசாலை, அல்லாரைப் பகுதியில் குளத்திற் குளித்துக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கியதில் எமைப்பிரிந்த-

**சக்கரபாண்டியன் - மலரோன்**

(வேலாயுதபிள்ளை ஜெயக்குமார் -அல்லாரை தெற்கு, மீசாலை - கொடிகாமம் - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6105)

# 45-ம் நாள் நினைவஞ்சலி

தங்கத் தமிழ்த் தலைவா - கிட்டு
வங்கக் கடலில் சங்கமித்தாயோ
பொங்கும் உணர்வுகள் யாவற்றையும்
மங்கச் செய்தனரே இந்தியர் பெருஞ்சதி

## கேணல் கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)


அவர்களுக்கும்

**ஏனைய ஒன்பது போராளிகளுக்கும்**

**எமது இதய அஞ்சலிகள்**

கொழும்புத்துறை கிராமிய கடற்றொழிலாளர்
அபிவிருத்தி அமைப்பு

(4370)



# கேட்கும்சக்தி இழந்தமையால் வேலையிலிருந்து ஓய்வு

கடமைக்காக சென்ற வேளையில் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி கேட்கும் சக்தியை இழந்த தபால் அதிபர் ஒருவருக்கு ஐம்பத்தைந்து வயதுவரை அவருக்குரிய சம்பளத்தையும் அதன் பின் இளைப்பாற்று சம்பளமும் வழங்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டில் நெடுங்கேணிப் பகுதியில் பதில் கடமையாற்றுவதற்காக சென்ற யாழ்ப்பாணம்மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த மரியநாயகம் போல் என்னும் இரண்டாம்தர தபால் அதிபரே இவ்வாறு மருத்துவ காரணத்தால் இளைப்பாற உள்ளவராவார்.

பதினெட்டு வருட காலம் அஞ்சல் திணைக்களத்தில் கடமையாற்றியஇவர் 24-03-92ல் நெடுங்கேணிப் பகுதியில் குண்டுத் தாக்குதலில் சிக்குண்டதால் கேட்கும் சக்தியை இழந்ததாகவும், அதனால் அஞ்சல் வேலை புரியும் தகுதியை இழந்திருப்பதாகவும் கூறப்பட்டு உள்ளது. எனினும் 55 வயதுவரை அவருக்குரிய சம்பளமும் பின்னர் இளைப்பாற்று சம்பளமும் வழங்கப்படவுள்ளது.

# காப்புறுதி கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்க முயற்சி

(கொழும்பு)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தை தனியாரிடம் சிறிலங்கா அரசு விற்க முயல்வதாக காப்புறுதிக் கூட்டுத்தாபன தேசிய தொழிலாளர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

750 கோடி ரூபா பெறுமதியுடைய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை 250 கோடி ரூபாவிற்கு அரசாங்கம் விற்க முயல்வதாகவும் அச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் ஆயுள் காப்புறுதி தொகையாக மட்டும் 350 கோடி ரூபா வரை இருப்பதாகவும் இவ்வாறிருக்க அரசாங்கம் தனியாருக்கு இதனை விற்க முயல்வதேன் என இச் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

# இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வெளி உதவிதேவையில்லை 6 மாதத்தில் திட்டம் வரும்

## -பிரேமதாசா நம்பிக்கை

(கொழும்பு)

எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குவெளியாரின்உதவி தேவையில்லை எனவும், தெரிவுக்குழு சிந்தித்துச் செயற்பட்டால் ஆறு மாதங்களுக்கு இடையில்இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனவும் ஜனாதிபதி பிரேமதசா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எமது நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளியாரின் உதவிஒருபோதும் தேவையில்லை. எமது நல்ல சிந்தனைகளின் அடிப்படையில் இப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படலாம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழு அச்சமின்றி நன்கு சிந்தித்துச் செயற்பட்டால் ஆறுமாத காலத்தினுள் தீர்வு காணப்பட முடியும் என்றும் குறிப்பிட்டார். எனவே தெரிவுக்குழு பயம், பீதி என்பனவற்றை அகற்றிச் செயற்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி பிரேமதாசா கேட்டுக் கொண்டார்.

# பிரிந்த குடியரசுகளுக்கு இலங்கை அங்கீகாரம்

[கொழும்பு]

முன்னாள் செக்கோசிக்வலாகியா 1993 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து செக் குடியரசாகவும், சிலவாக் குடியரசாகவும் பிரிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவ்விரு குடியரசுகளையும் அங்கீகரிப்பதற்குச் சிறிலங்கா அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இம்முடிவு குறித்து சம்பந்தப்பட்ட அரசுகளுக்கு புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் மூலமாகவும், மாஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதுவர் மூலமாகவும் இலங்கை அறிவித்துள்ளது.

# குன்றக்குடி அடிகளார் இலங்கைவர மறுப்பு

(கொழும்பு)

தமிழகத்தில் பிரபலமான தவத்திரு குன்றக்குடி அடிகளார் இலங்கை வருவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். தற்சமயம் தமிழகம் சென்றிருக்கும் இந்துசமய ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் குன்றக்குடி அடிகளைச் சந்தித்து எதிர்வரும் மே மாதத்தில்நடைபெறவிருக்கும் சாகித்திய விழாவில் கலந்துகொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தமை தெரிந்ததே.

# பாராட்டு விழா

(கொடிகாமம்)

தென்மராட்சி கல்விகோட்ட மட்ட 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை திரு. அருட் பிரான்சிஸ் ஜோசப் அடிகள் தலைமையில் யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில்சிறப்புவிருந்தினராக வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன், தென்மராட்சி கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன், தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. அருளாளன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் 65 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசில்களை வடபிராந்திய கல்விப் பணிப்பாளரும் தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளரும் வழங்கி கௌரவித்தனர். இதில் தென்மராட்சி தளபதி திரு. பரணி தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கந்தண்ணா அவர்களும் கலந்து கொண்டனர். (86)

# அலுவலகம் திறப்பு

(கொடிகாமம்)

தென்மராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கத்திற்கான தலைமை அலுவலகம் ஒன்று அண்மையில் மீசாலையில் வட பிராந்திய சிகை அலங்கரிப்பு சங்கத்தின் தலைவர் திரு. சூசை எட்வேட் அவர்களால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இதற்கு தென்மராட்சி சிகை அலங்கரிப்புச் சங்கத்தின் தலைவர் திரு. க. மகேந்திரன் தலைமை வகித்தார். (86)

# உடுபுடைவை அன்பளிப்பு

(கொடிகாமம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையூடாக நேற்று முன்தினம் சனிக்கிழமை கைதடி நுணாவிலில் உள்ள ரயர் தொழிலக அகதிமுகாமில் உள்ள அகதிகளுக்கு இலவசமாக உடுபுடைவைகளை சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் பிரதிநிதியும் யாழ். செஞ்சிலுவைச்சங்கத்தின்உபதலைவரும் வழங்கினர். (86)

# பல்கலைக்கழகமாணவருக்கு கம்பியூட்டர் பயிற்சி

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடமாணவர்களுக்கு கம்பியூட்டர் பயிற்சி நெறி வழங்கப்பட்டு வருகிறதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் இப்பயிற்சி நெறி முதலாம் ஆண்டு (1991-92) மாணவர்களுக்கே வழங்கப்படுவதாகவும், பின்னர் இத்திட்டம் விரிவாக்கப்பட்டு ஏனைய வருட மாணவர்களுக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பயிற்சி முடிவின் போது பல்கலைக் கழகத்தினரால் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முதலாம் வருட முழுமாணவர்களும் பயிற்சியை பெறக்கூடியளவிற்கு கம்பியூட்டர் கணனிகள் பற்றாக் குறையுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [05]

## வரி உயர்வை ஒத்திவைக்க கோரிக்கை

யாழ்ப்பாண மாநகரசபையினரால் அண்மையில் சோலை வரி மூன்று மடங்காக உயர்த்தப்பட்டமையை நல்லூர் ஓய்வூதியர் சங்கம் கண்டித்துள்ளது. இந்த வரி உயர்வை காலவரையறையின்றி ஒத்திவைக்க வேண்டுமெனவும் அச்சங்கத்தினர் மாநகர ஆணையாளர் வி.பி. பாலசிங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கிளாலிக் கடலில் தாக்குதல் இருவரைக் காணவில்லை

(தென்மராட்சி)

சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு அஞ்சி கடலில்பாய்ந்த இருவர் இதுவரை கரை சேரவில்லை. இவ் இருவருக்கும் என்னகதி நேர்ந்தது என்று அறிந்து கொள்ள முடியவில்லை.

கடந்த 24ஆம் திகதி கிளாலியில் இருந்து மறு கரைக்கு 5 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த படகு மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடாத்தினர் இதனால் இப்படகில் பயணம் செய்த நடராசா என்பவரும் மேலும் ஒருவரும் கடலில் பாய்ந்து விட்டனர். ஏனையோர் திரும்பிவந்துவிட்டனர். கடலில் பாய்ந்தவர்கள் குறித்த தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. (86)

# நிர்வாகிகள் தெரிவு

சரவணை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புப் பொதுக்கூட்டம் அண்மையில் உதவிகிராம அபிவிருத்திஉத்தியோகத்தர் திரு. சு.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

சரவணை மேற்கு கிராம அலுவலர் திரு. செ. சச்சிதானந்தன் கலந்துகொண்ட இப் பொதுக்கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக திரு. நா. சின்னராசா, செயலாளராக திரு. நீ. யேசுரட்ணம், பொருளாளராக திரு. ம. கந்தையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டதுடன் காப்பாளராக வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. இ. இளங்கோவும், கணக்குப்பரிசோதகராக நாகேஸ்வரி மகாவித்தியாலய அதிபர் திரு. கு. கணேசலிங்கமும் தெரிவாகினர்.

★

பருத்தித்துறை மாதனை சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திலே தலைவராக திரு. வ. விக்கினராஜாவும், செயலாளராக திரு. இ. இராஜமோகனும், பொருளாளராக திரு. இ. தருமரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர். (25)

★

பருத்தித்துறைநெல்லண்டை சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைவராக திரு. நா. விஜயரத்தினமும், செயலாளராக திரு. காசி கார்த்திகேசுவும், பொருளாளராக திரு. ம. கணபதிப்பிள்ளையும், போஷகராக திரு. ஆ. சி. சிவபுண்ணியமும் தெரிவு செய்யப்பட்டனர். (25)

## 53 ஆவது நாள்

நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

## சித்திரவடிவேல் இராசதுரை

[ராஜன்]

மண்ணில் 25-09-1972 விண்ணில் 08-01-1993

ஈர்பத்து வருஷம் இன்னலேதும் இல்லாமல்
இன்னமுதே அன்போடு வளர்த்த காலம் மறப்போமா
இராசதுரை என்றே ஆசையோடு பெயரிட்டு
இராசாபோல் நீ வளர்ந்த கோலம் நினைப்போமா
இவ்வுலகில் வாழ்ந்த காலம் இனிப்போதுமென்றோ
இளமைக் கனவோடு இறைவனடி நீ சேர்ந்தாய்
இராசதுரையே எம் அன்புச் செல்வமே
இழந்தும் உன் நினைவை இழக்க முடியாது
இன்றிங்கே வாழ்கின்றோம் எம்துயர் அறியாயோ
இன்னுயிரின் சாந்திக்காய் இறைவனை இறைஞ்சுகிறேன்.

இவரது மறைவின் போது எமக்கு பல வழிகளிலும் உதவி, ஒத்தாசைகள் மற்றும் அனுதாபங்களையும் புரிந்தவர்களுக்கு எமது குடும்பத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பதோடு, 1-3-93 (இன்று) நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

சுப்பர் மடம், பருத்தித்துறை. குடும்பத்தினர்.

(சி-6110)

## அவசர நோயாளர் சேவை கிளிநொச்சியில் விஸ்தரிப்பு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இருந்து அவசரமான நோயாளர்கள் இலங்கை செஞ்சிலுவை சங்க கிளிநொச்சி கிளையின் ஒத்துழைப்புடன் வவுனியா வைத்தியசாலைக்கும், கொழும்பு வைத்தியசாலைக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றனர். செஞ்சிலுவைச் சங்கத்தின் இச்சேவை வாரத்தில் நான்கு தடவை இடம்பெறுவதாகவும் இதனால் நோயாளர்கள் பெரும் பயன் எய்துவதாகவும் குறிப்பிடப்படுகிறது. மேலும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்கம், வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை ஊழியர்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றி வருவதாகவும் கூறப்படுகின்றது.

(16)

தாண்டிக்குளம் தடைமுகாமில்

## கடத்தலுக்கு உதவிய 'மேஜர்' இராணுவப்பொலீசால் கைது

(கொழும்பு)

தாண்டிக்குளம் தடை முகாமில் பணியாற்றிய இராணுவ மேஜர் ஒருவர் இராணுவப் பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். வடபகுதிக்கு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான வாகன உதிரிப் பாகங்களைக் கடத்திச் செல்வதற்கு வர்த்தகர் ஒருவருக்கு உதவி புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப்பட்ட இவர் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். தாண்டிக்குளம் தடை முகாமிற்கு அப்பால் கிளிநொச்சிப் பகுதியைச்சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் வாகன உதிரிப்பாகங்கள் ஒப்படைக்கப்பட இருந்த சமயம் இராணுவப் பொலீசார் இக்கடத்தலைக் கண்டு பிடித்ததாகக் கூறப்படுகிறது.

## 45-ம் நாள் நினைவ அஞ்சலி



### கடற்புலி லெப்.நல்லவன்

(ஞானசுந்தரம் ரமேஸ்)

வீரப்பிறப்பு: 27.03.1975

வீரச்சாவு: 16.01.1993

**வங்கக்கடலில் நாயகன் நல்லவன்**

வங்கக் கடலோரம் வந்த நம் வீரரை
வஞ்சனை எண்ணமுடன் வந்து வலை வீசினர்
தந்திரமாகவே தம்திட்டம் திணித்திட
வந்திட வேண்டுமென்று வருத்தியே இழுத்தனர்.

சென்றிடுவோமா வெஞ்சமர் ஆடிய வேங்கைகள்
செருக்களம் மீதில் புறமுதுகிட்ட புண்ணிய
பாரத பூமியின் படைகளுடனே
நெஞ்சிலே சுடர் கொண்ட வேலினைப் பாய்ச்சிடும்

நெஞ்சமதை மறக்குமா நாம் கொண்ட தாகமதை
வெஞ்சினம் கொண்டனர் வெடிகொண்டு தகர்த்தனர்
படகோடு உடல் சிதற — பாரதம்
தலைகுனிய வைத்தனரே

கிட்டண்ணாவோடு ஒன்பது வீரர்கள்
விரைந்து தமிழீழம் வந்தனர்
வந்தது காலனவன் உருவில்
இந்தியா என்ற பெரும் பூதம்

நல்லவன் எனும் நாமம் கொண்டவன் நீயன்றோ
நாட்டினை மீட்டிட நாடியே சென்றனையோ
அண்ணனின் அணியினில் ஆழமாய் நீயூன்றி
மண்ணிற்காய் மாய்ந்த நீ, மனங்களில் நிறைந்தாய்.

நல்லவனின் ஆத்ம சாந்திக்காக 1. 3. 93 திங்கட்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் சமயக் கிரியைகளில் கலந்து கொள்வதோடு, எமது மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல: 184, 6-ம்குறுக்குத்தெரு,
மணிப்புரி,
கொழும்புத்துறை.

இப்படிக்கு
இவரின் பிரிவால் துயருறும்
**தாய், சகோதரி.**

(4364)

வைத்தியர்களுக்கு

## சலுகை

[கொழும்பு]

உதவி வைத்திய அதிகாரியாகப் பணிபுரியும் ஒருவர் எட்டு வருட வேலையைப் பூர்த்தி செய்த பின்னர் பதிவு பெற்ற வைத்திய அதிகாரியாக முடியும் என்று சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கு முன்பாக இதற்காக பதினைந்து ஆண்டு காலம் சேவையாற்ற வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## தொண்டா

சீனா செல்கிறார்

[கொழும்பு]

சீன மக்கள் குடியரசின் அழைப்பின் பேரில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் சீனா விற்கு பயணமாகவுள்ளார்.

### தபால் திருடியவர் கைதானார்

களுத்துறை தபாலகத்திலிருந்து வெளிநாட்டுத் தபால்களைத் திருடிச் சென்றோர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தபால் நிலையத்திலிருந்து 59 வெளிநாட்டுத் தபால்களை திருடிச் சென்றதாக அதே கந்தோரில் பணிபுரியும் இரு ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு ஊழியர்களும் தற்போது பொலீஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகசெய்திகள் தெரிவிக்கின்றன.

### சைவத்தமிழ் மன்றம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

''தென்மராட்சி சைவத் தமிழ் மன்றம்'' கடந்த 19-ம் திகதி வெள்ளிக்கிழமை நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில்நடைபெற்ற கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் பின்வருவோர் நடப்பு வருடத்திற்கான உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்; தலைவர் வேதாகம சோதிடபூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள், உபதலைவர் இ. கணேசன், செயலாளர் ந. புகன் ஸ்ரீந்திரன், உபசெயலாளர் சோ.முரளி, பொருளாளர் க. தர்மராஜா ஆகியோரும் மற்றும் ஆறுநிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## மூதவை முடிவு


பௌதிக விஞ்ஞானக் கற்கை நெறிக்கு இரண்டாவது தொகுதியாகத் தெரிவு செய்யப்பட்டு வந்த மாணவர்கள், கால இடைவெளி இல்லாமல் இக் கல்வி ஆண்டிலேயே கல்வியைத் தொடர்வதற்கு அண்மையில் கூடிய யாழ். பல்கலைக்கழக மூதவைமுடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

மொத்தம் 115 மாணவர்கள் பௌதிக விஞ்ஞானக் கற்கை நெறிக்கு இரண்டாவது தொகுதியில் தெரிவு செய்யப்பட்டவர்களாகும்.

### மறுமலர்ச்சிக் கழக நிர்வாகிகள் தெரிவு

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் நிகழும் கல்வி ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. தலைவராக த. ஸ்ரீகாந்தனும், உப தலைவராக செல்வி க.அருணாவும், செயலாளராக செல்வி பொ. பவானியும், உப செயலாளராக மா. ஜெயக்குமாரும், பொருளாளராக செல்வி ஸ்ரீ கௌரியும், மற்றும் இணைப்பதிப்பாசிரியர்களாக செல்விகள் இ.ஜெயலக்சுமி, க. சிவநாயகி ஆகியோரும் உப செயலாளராக ம.உதயகுமாரும் மேலும் ஆறு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## நெஞ்சம் நெகிழும் 60-ம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



உயர்திரு. அமரர்

### இராசிங்கம் செல்லத்துரை

தோற்றம் [மண்ணில்] மறைவு [மனதில்]

26-04-1926 02-01-1993

ஓ எங்கள் உயிரே
உறவுக்காய் உவகையுடன்
உயர் பணிகள் ஆற்றி நின்ற
தாத்தாவே எம் தந்தையே
கிளாலிக் கடல் உன்னை
எம்மை விட்டு பிரித்ததுவோ
ஊருக்காய் உழைத்திட்ட உத்தமனே
காலத்தில் அழியாத காவியமே
அணைந்தும் அணையாத அகல் விளக்கே
உங்கள் செய்கைகள்! சொல்லுகள்
எந்நாளும் எம் நெஞ்சை விட்டு
என்றுமே அகலாது - உங்கள்
நினைவுடனே வாழுவோம்.

02- 01- 93 அன்று கிளாலிக் கடலில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் அகால மரணமடைந்த எமது குடும்பத்தின் குல விளக்கான அமரர் திரு. இராசிங்கம் செல்லத்துரை அவர்களின் இறுதி நிகழ்வுகளுக்கு உதவிய இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி பிரிவு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், வாகன உரிமையாளர்கள், சாரதிகள், படகோட்டிகள், வகுப்புத்தொழிலாளர்கள், கிளிநொச்சி வைத்திய சாலை மருத்துவர்கள், ஊழியர்கள், விடுதலைப்புலிப் போராளிகள், தமிழீழ காவல்துறையினர் மற்றும் எம்மோடு தோளோடு தோள் நின்று எமக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அவ்வகையில் உதவி செய்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்க்கும் எமது இதயம் கலந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

02- 03- 93 அன்று எமது வீட்டில் இடம் பெற இருக்கும் வீட்டுக் கிருத்திய வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


02- 01- 93 அன்று கிளாலிக் கடற்பரப்பில் பலியான அனைத்து தமிழீழ மக்கள் அனைவருக்கும் எமது இதய அஞ்சலிகள்.

எல்லாளன் சனசமூக
நிலைய அருகாமை
நாவக்கிரி,
புத்தூர்,


மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்

(4368)

# வங்கக்கடலில் காவியமான வேங்கைகள்



மேஜர் வேலன் (மலரவன்)



மூத்த தளபதி
**கேணல் கிட்டு**




கடற்புலி லெப் தூயவன்




கடற்புலி கப்டன் நாயகன்



லெப். கேணல் குட்டிசிறி




கடற்புலி லெப் நல்லவன்



கடற்புலி கப்டன் றொசான்



கடற்புலி கப்டன் குணசீலன் [குணராஜ்]



கடற்புலி லெப். அமுதன்



கடற்புலி கப்டன் ஜீவா


**மூத்த தளபதி கேணல் கிட்டு அண்ணாவுடன்
மற்றும் ஒன்பது கடற் புலிகளுக்கும்
45ஆம் நாளினை நினைவு கூர்ந்து
எமது வீர வணக்கத்தைச் செலுத்துகிறோம்.**

**- வலிகிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின்
ஒன்றியம்**

[சி-6106]

## 45-ம் நாள் நினைவலைகளும்

அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



கடற்புலி

**கப்டன் றொசான்**

[இரத்தினசிங்கம் அருணராசா]

வீரப்பிறப்பு: 10-02-1975 வீரச்சாவு: 16-01-1993

வங்கக்கடலிலே மூத்த தளபதி கிட்டுவுடன் கப்பலையும் தகர்த்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலி கப்டன் றொசானின் (இரத்தினசிங்கம் அருணராசா) 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும் இன்று(01-03-1993)திங்கட்கிழமை நடைபெறும்.போராளிகள்,நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

அரசடி வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்

(4360)

### இலட்சார்ச்சனை

(கொழும்புத்துறை)

பொன்னாலை அருள் மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த இலட்சார்ச்சனை கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழி பாட்டுடன் நடைபெற்றுவருகின்றது.

எதிர் வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை 10 ஆம் நாள் சுவாமி வீதியுலா நிகழ்வுடன் வைபவம் முடிவுறும். (24)

## திருட்டு

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விஞ்ஞான கூடம், மனையியல் கூடம் ஆகிய வற்றிலிருந்த பொருள்கள் உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் நீர் விநியோக குழாய்கள் உபகரணங்கள்உடைத்துத்திருடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மாதகல் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரது எறிகணைத் தாக்குதல்களினால் இப்பகுதி மக்கள் வெளியேறியுள்ளதால் இப்பகுதி வெறிச்சோடிய நிலையில் காணப்படுகின்றது. (20)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் அரச கணக்காளர்களின் பங்குனி மாதத்திற்கான கலந்துரையாடல் நாளை பிற்பகல் இரண்டு மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. திரு.எஸ்.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் பிரதேசசெயலகங்களில் கணக்காளர்களின் பங்கு என்பது பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெறவுள்ளது.

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு பொருள்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பாவனைக்கென கிளிநொச்சிஅபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வு கழகத்தினர் ஐயாயிரம் ரூபா பெறுமதியான பாய்கள், பீங்கான்கள், குவளைகள்போன்றவற்றை அன்பளிப்பு செய்துள்ளனர். அத்துடன் அவசர நோயாளர்களின் தேவைக்கென நோயாளர் நலன்புரிச் சங்கத்தினூடாக பணஉதவியும் செய்யப்பட்டு வருகின்றது (16)

## 6-ம் மாத நினைவலைகள்..

வீரப்பிறப்பு 26 – 11 – 1975



வீரச்சாவு 01 – 10 – 1992

**வீரவேங்கை குயிலன்**

[ஜெயராசா ஜெயவேரன்]

திதி - 01-03-1993

மலரொன்று மணம் வீசி
உதிர்வானது - அது
மணம் வீசும் காலத்தில்
களம் போனது - எம்
பாசவிறல் வேங்கை - குயிலா
நீ கொண்ட இலட்சியப் பற்று
வெகுவிரைவில் ஈடேறும் - உன்
கனவு நனவாகும்.
மலர்வுடனே நீ தூங்கு!

அரசடி ஒழுங்கை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

(4369)

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



கடற்புலி

**லெப்டினன்ட் தூயவன்**

(மகாலிங்கம் ஜெயலிங்கம், ஜெயன்)

யா நல்லூர் தெற்கு சிறிவிக்னேஸ்வரா வித்தியாலய இறுதியாண்டு மாணவன்

மண்ணுக்காக 02-08-1974 மக்களுக்காக 16-01-1993

மனையதில் மலர்ந்து மனமது மகிழ
மடியதில் தவழ்ந்த மகவே மதிலதில் ஏறி
மனநிறைவுடன் மகிழ்ந்து மடாரென விழுந்து
மகிழ்விக்கும் மைந்தனே
மண்ணினை மீட்க அந்நியர் தன்னை
மாய்த்திடத் துடித்த 'தூயவா'
மாண்புடன் மாவீரனாகி மாபெரும் கடலில்
மடிந்தாயோ? மம்மியை, டடாவை
மாவீரனைப் பெற்ற மனிதர்களாக்கி
மறைந்தாயோ?


இவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

127/1, கண்டி வீதி,
அரியாலை, யாழ்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(4363)

## நாற்பத்தைந்தாம் நாள் ஞாபகத்தில் தீ வளர்த்தோம்



**கேணல் கிட்டு மாமா**

அவர்களுக்கும்



**கப்டன் குணசீலன்**

அவர்களுக்கும்

இவர்களுடன் வங்கக் கடலில்
ஆகுதியான மற்றும் எட்டு வேங்கைகளுக்கும்

இந்திய சூழ்ச்சிக்கு பலிக்கடாக்களா?
நீங்கள் – இல்லை!
இந்துமா கடலில் சரித்திரம் எழுதிய
நாயகர்கள்!
வங்கக் கடலில் பங்கம் ஏற்பட்டது;
உண்மைதான் — என்றாலும்
வரிப்புலி சகாப்தம் படைக்கவென்றே
தசாப்த எண்ணிக்கையில்
வேள்வித்தீ வளர்த்து வென்றீர்கள்!

**கண்ணீர், இதய அஞ்சலிகள்!**

**மொறாயஸ்**

(கண்ணாடி விநியோகிப்பவர், பல்கட்டுபவர்)

**50, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.**

(சி-6096)

சிந்தனைக்கு

கவிதை எழுதுவதைப் போலவே, கழனி உழுவதும் கண்ணியம் மிக்கதே என்பதை உணரும் வரை எந்த இனமும் முன்னேற முடியாது.

— புக்கர் டி. வாஷிங்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## உணவிற்காக ஒரு போர்

**வ**டக்கிற்கு அத்தியாவசியப் பொருள்களுடன் பல கப்பல்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும் கப்பல்கள் அனுப்பபடவுள்ளன. யாழ். குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு எதுவித தட்டுப்பாடும் இல்லை. இவ்வாறு சிறிலங்கா அதிகாரிகள், அரசியல்வாதிகள் தொடர்ந்து அறிவித்தவண்ணமுள்ளனர்.

ஆனால், அவர்கள் கூறுவதில் கால் மெய், முக்கால் பொய் என்ற நிலையில், யாழ். குடாநாட்டில் நிலவும் உணவுப் பற்றாக்குறை, அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு என்பன பற்றி நாம் குறிப்பிட்டுத்தான் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதல்ல. அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தினால் அன்றாடம் பாதிக்கப்பட்டுள்ள மக்களே இதனை நேரடியாகப் புரிந்து கொள்வார்கள்.

இதேநேரம் அரசாங்கமும் ஆனைப்பசிக்குச் சோளப் பொரி என்ற ரீதியில் சிறிதளவு உணவுப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளது என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அவை சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் மீது கொண்டுள்ள பற்றினால் அனுப்பி வைக்கப்படவில்லை. பல உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்களின் காரணமாக அனுப்பி வைக்கப்பட்டவை என்பதே முக்கியமானதாகும்.

இவ்வாறு, உணவுப் பொருளின் ஒரு சிறு பகுதி அனுப்பி வைக்கப்பட்டாலும், அரசாங்கம் யாழ். குடாநாட்டிற்குரிய உணவுப் பொருள்களுக்கான விநியோகத்தை முழுமையாக தனது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கவே விரும்புகின்றது. கடந்த மாதத்தில் இதனைப் பரீட்சித்தும் பார்த்துள்ளது. அதாவது தேவைஏற்படும் போது குடாநாட்டிற்கான உணவு விநியோகத்தை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து பட்டினிச் சாவின் மூலம் தமிழரைப் பணியவைக்கப் பார்க்கின்றது.

குடாநாட்டிற்கான பாதை விவகாரத்தில் இருந்தே இதனை சகலரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும். யாழ். குடாநாட்டை தனது இராணுவத்தின் மூலம் முற்றுகையிட்டுள்ள சிறிலங்கா அரசாங்கத்திடம் பல்வேறு தரப்பினர் மக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்குப் பாதையைத் திறந்து விடக் கோரிய போதிலும், அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. மாறாக முற்றுகையை மேலும் இறுக்குவதன் பொருட்டு கடல் நீரேரியில், கடற்படை ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரமாக்கியுள்ளது. அதாவது யாழ். குடா நாட்டுடனான போக்கு வரத்தை முழுமையாகத் துண்டித்துவிட முனைந்து நிற்கின்றது.

இந்நிலையில், சிறிலங்கா அரசாங்கம் அனுப்பும் உணவுக் கப்பல்களைக் கண்டு சந்தோசப்பட ஏதுமில்லை. எமது பிரச்சினை ஒரு சில கப்பல்களினால் தீர்ந்துவிடப் போவதில்லை. மாறாக, இது எமது பலவீனத்தை எமக்கு உணர்த்தும் ஓர் அவமானகரமான அம்சம் என்பதோடு ஓர் எச்சரிக்கையுமாகும். தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட முடியாத ஒன்று என உலகில் இன்று விமர்சனம் செய்யப்படும் வேளையில், உணவிற்காக நாம் கையேந்துவது வேதனை அளிக்கும் ஒன்றாகும். ஆகையினால், கப்பல்களில் வரும் உணவுகள் ஒரு புறம் இருக்க, எமது தேவைகளை நாமே தேடிக் கொள்ளும் வகையில் ஒரு பெரும் போரை எமது மண்ணில் நடத்த தயாராக வேண்டும். அப்பொழுதே எமது தேவையும் நிறைவுறும், எமது விடுதலையும் உறுதிப்படுத்தப்படும்.

# கொடித்தோடை செய்கையில் பெரும் லாபம் ஈட்டலாம்

கொடித்தோடை (பெசன் புறுட்) செய்கையில் ஈடுபடுவதால் பெரும் இலாபம் ஈட்டக்கூடியதாகஇருக்கும்என்று தமிழீழபொருண்மியமேம்பாட்டுக் கழகத்தின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

எமது பிரதேசத்தில் கொடித்தோடை செய்கையானது இலகுவானது ஆகும். அத்துடன் பெருமளவு இலாபமீட்டித்தரக்கூடிய ஒரு முயற்சியாக அமைந்திருப்பதோடு மட்டுமல்லாது, எதிர்காலத்திலும் வெற்றியளிக்கக்கூடிய ஒன்றாகவே இது அமையும். பழச்சாறு, பழப்பாகு, குளிர் பானங்கள் போன்றவை தயாரிப்பதற்கு இதன் பழம் பெருமளவில் பயன் படுகின்றது. எனவே எதிர்காலத்திலும் இதன் தேவை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் உண்டு

ஊதா தண்டும், மஞ்சள் பழமும் உடைய வர்க்கமே எமது பிரதேசத்துக்கு உகந்ததாகும். இதை வீட்டுத்தோட்டத்திலும், வீட்டின் சுற்றுப் புறங்களிலும், பந்தலிலும் வேலியிலும் படரவிடலாம். இதனை ஒழுங்காக வேலியில் அல்லது பந்தலில் படரவிட்டு கத்தரித்து வளர்ப்பதன் மூலம் நல்லபயனைப்பெறலாம்.

பந்தலில் வளர்க்கும் போது பந்தலுக்கு வரும்வரை கிளைகளை அகற்றித் தனியாக வளரவிட்டு பந்தலுக்கு வந்ததும் துளிரைக்கிள்ளிக் கொப்புகளை வரச்செய்து நாலாபக்கமும் படரவிட்டு ஒரு வடிவம் கொடுக்கலாம். வேலியில் வளர்க்கும் போது மூன்று அடி வரை கிளைகள் விடாமல் வளர்த்து, பின்னர் கிளைகளை வேலியில் சீராகப் படரவிடவேண்டும்

இந்தப்பயிரை வடிவமைத்து வளர்த்தலும், கத்தரித்தலும் மிகமுக்கியமானதாகும். கூடிய விளைவு பெறவும் தேவையில்லாத கிளைகளை அகற்றவும், சுலபமான அறுவடைக்கும் பழம்தரமானதாக இருக்கவும் கத்தரித்தல் அவசியமானதாகும். இத்துடன் இப்பயிர் பெருமளவுபூத்தாலும் காய்ப்பதில்லை. எல்லாப் பூக்களும் காயாவதற்கு மகரந்தச் சேர்க்கை அவசியமானதாகும். இதற்கு கையால் ''மகரந்தச் சேர்க்கை'' செய்யலாம். இப்பூக்கள் 11மணியளவில் பூப்பதனால் 11மணிக்கும் 2மணிக்கும் இடையில் கையினால் மகரந்தச் சேர்க்கை செய்யலாம். இதற்கு ஒருகுச்சியில் பஞ்சைச் சுற்றி மகரந்தமணி குறியில் படக்கூடியதாக தொடுவதன் மூலம் மகரந்தச் சேர்க்கை செய்யலாம்.

பொதுவாக இந்த மரங்களில் நோய் பூச்சித் தாக்கம் அதிகமாக ஏற்படுவதில்லை. ஆனால் வடிவமைக்கும்முறை, மகரந்தச்சேர்க்கை செய்கின்ற முறை, ஆகியவற்றை பயிரிடுபவர்கள் பின்பற்றாததால் பெருமளவு உற்பத்தியினைப் பெறமுடியாத நிலை கூடுதலாகக் காணப்படுகிறது. இவற்றினை சரிவரச் செய்வோமாயின் உற்பத்தியினைப் பெருக்குவதனூடாக எமது தேவைகளை நாமே நிறைவு செய்து கொள்ள முடியும்.

மேஜர் பிரதாப்செட்டி மாதிரிப்பண்ணையிலே இந்த மரக்கன்றுகளை பெருமளவிலே உற்பத்திசெய்து வழங்கும் நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது. அத்தோடு சுரபி உணவு பதனிடல் நிறுவனத்தினர் இங்கு உற்பத்தி செய்யும் பழங்களைக் கொள்வனவு செய்து உற்பத்தி முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். இது சம்பந்தமான மேலதிக விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மென்பந்து விளையாட்டுப்போட்டி

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இவ்வாண்டிற்குரிய 19 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான பாடசாலைகளுக்கிடையேயான மென்பந்து விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இன்று முதலாம் திகதி கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் கனகரட்ணம் ம. ம. வித்தியாலயத்திற்கும் ஹாட்லிக் கல்லூரிக்கும், மார்ச் 10ஆம்திகதிஹாட்லிமைதானத்தில் யாழ்.இந்துக் கல்லூரிக்கும் ஹாட்லிக்கல்லூரிக்கும், மார்ச் 13ஆம் திகதி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் ஹாட்லிக்கும் இடையே போட்டிகள் நடைபெறவுள்ளன.

## மொழிப்பற்று இருப்பதுடன் வளர்க்க முன்வரவேண்டும்

(யாழ்ப்பாணம்)

வெ. இளங்குமரன்

''நாம் எமது தாய்மொழியில் பற்றுக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதன் செழிப்புத் தன்மையையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.'' இவ்வாறு நேற்று யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற யாழ்ப்பாண ஆரிய-திராவிட பாஷா அபிவிருத்திச் சங்க சிறப்புப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்; தற்பொழுது தமிழீழத்தில் தமிழ் மொழியின் செழிப்புத் தன்மை குன்றியிருப்பதையிட்டு கவலை தெரிவித்தார். அத்துடன் தமிழ்மொழியை வளர்ப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும் என கேட்டுக்கொண்டார் இன்று, 1992ஆம் ஆண்டு மேற்படி சங்கம் நடாத்திய பாலபண்டித பிரவேசபண்டித பரீட்சைகளிலே சித்தி பெற்று சான்றிதழ்களைப் பெறுகின்ற மாணவர்கள் எமது மாணவ சமுதாயத்தின் மத்தியில் தமிழ்மொழித் தேர்ச்சியினை மேம்படுத்த உதவுமாறும் இனி இவ்வாறு நடைபெற இருக்கும் பண்டித பாலபண்டித வகுப்புக்களில் தேர்ச்சிபெற ஆவலாக உள்ளோர் தமிழீழ மாணவர்களுக்கு தமிழ்மொழித் தேர்ச்சியினை மேம்படுத்த முன்வரவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டதுடன் இதற்கு முன்னோடியாக பண்டித, பாலபண்டித வகுப்புக்களை நடாத்த எமது தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை நூல்கள் மற்றும் ஒளிவசதிகளையும் செய்து கொடுக்கத் தயாராக இருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

## நிர்வாகிகள் தெரிவு

(தொல்புரம்)

வலிமேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்திற்கான நடப்பு ஆண்டிற்குரிய நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் அண்மையில் சுழிபுரம் பிரதேச சபைச் செயலாளர் திரு. எஸ். ரி. கதிரவேற்பிள்ளை தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படிக் கூட்டத்தில் தொல்புரம் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தைச் சேர்ந்த திரு. ச. கைலாசநாதன் தலைவராகவும், அராலி தெற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த திரு. ச. நடராசா செயலாளராகவும், வட்டுக் கிழக்கு அறிவொளி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த திரு. வே. சிவலிங்கம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் இந்நிகழ்வில் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி. ராணிரத்தினதேவி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சனசமூக நிலையங்களின் இவ்வாண்டிற்கான சிறப்புப் பணிகள் பற்றி உரையாற்றினார். [36]

## பாதுகாப்புச் செலவினம் இந்தியாவில் அதிகரிப்பு

(டில்லி)

இந்தியாவின் பாதுகாப்பு செலவினம் 1600 லட்சம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தில் இந்திய நிதியமைச்சர் திரு. மன்மோகன் சிங்நேற்று 1993-1994 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்

அனைவரினதும் பாராட்டுதலையும் பெற்றுள்ளதாக வர்ணிக்கப்படும் இந்த வரவு செலவுத்திட்டத்திலேயே இவ் அதிகரிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது

இதில் உலகில் மிகப் பெரிய இராணுவங்களில் ஒன்றான இந்திய இராணுவத்திற்கு சென்ற ஆண்டை விட கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் புதிய நிதியாண்டிற்காக 19170 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டிலும் பார்க்க 1600 லட்சம் ரூபா கூடுதலானது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை விண்வெளி ஆராய்ச்சிக்கென 5700 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## லண்டனில் குண்டு வெடிப்பு பதினெட்டுப் பேர் படுகாயம்

[லண்டன்]

லண்டனில் பரபரப்பு மிகுந்த சந்தைப் பகுதி ஒன்றில் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்பினால் பதினெட்டுப் பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இக்குண்டு வைக்கப்பட்டிருப்பது தொடர்பாக ஐரிஷ் குடியரசு இராணுவம் எனப்படும் ஐ. ஆர். ஏயிடமிருந்து தொலை பேசி மூலமான எச்சரிக்கை கிடைக்கப்பெற்ற சில நிமிடங்களில் குண்டு வெடித்ததாகவும், பொலீசார் எச்சரிக்கையுடனிருந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் காயமடைந்தோர் எண்ணிக்கை குறைவடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

## மட்டக்களப்பு திகினிவெட்டையில்
# படையினர் வெறியாட்டம்
# 6 தமிழர் பலி; 60 பேர்கைது
### நெற் சூடுகளுக்கு தீவைப்பு

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரும் துரோகக் கும்பல்களும் இணைந்து திகினிவெட்டை எனுமிடத்தை சுற்றிவளைத்து ஆறு பொதுமக்களைச் சுட்டுக் கொன்றதுடன் 60 பொதுமக்களைக் கைது செய்ததுடன் பல சொத்துக்களையும் தீயிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் திகினிவெட்டை பகுதியை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரும் துரோகக் கும்பலும் அங்கு வயல்வேலையில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் அங்கு வேலை செய்துகொண்டிருந்த சந்திவெளியைச் சேர்ந்தவர்களான பிதாம்பரம் நாகநாதன் (வயது 30) கந்தைய ஆனந்தன் (வயது 19) வடிவேல் மோகன் (வயது 19) பொன்னுத்துரை அன்பு (வயது 25) மற்றும் சித்தாண்டியை சேர்ந்த கந்தையா (வயது 40) நற்பிட்டிமுனையைச் சேர்ந்த தேவகரன் (வயது 16) ஆகியோர் பலியானார்கள்.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்த 19 நெற்சூட்டையும் பன்னிரண்டு வீடுகளையும் இவர்கள் தீயிட்டுள்ளனர். இதனால் இவை அனைத்தும் எரிந்து சாம்பாராகின.

தொடர்ந்து அங்கிருந்த பெண்கள் சிறுவர்கள் உட்பட அறுபது பொதுமக்களைக் கைது செய்து புலிபாய்ந்தகல் சிறிலங்கா இராணுவ முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

கைதுசெய்யப்பட்ட பொதுமக்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

## இராணுவத்தின் சூட்டிற்கு குடும்பஸ்தர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களினால் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

கடந்த 21-ம் திகதி காலை மயிலவெட்டுவான்கொட்டனி எனும் இடத்திலேயே சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகத்தை நடாத்தியுள்ளனர். இதனால் வந்தாறு மூலையைச் சேர்ந்த தி. நல்லரெத்தினம் (வயது 35) என்பவர் பலியானார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

## தேசவிரோதிகளின் சூட்டிற்கு ஒரு பொதுமகன் பலி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில்சிறிலங்காஇராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து பதுங்கியிருந்து வீதியால் சென்றோர் மீது நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் பொதுமகன்ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 22ஆம் திகதி காலை 7 மணியளவில் அம்பிலாந்துறை சிறிலங்கா இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரும், ரெலோ கும்பலும் பண்டாரியார் வெளி எனுமிடத்தில் பதுங்கியிருந்துள்ளனர்.

இதேவேளை அப்பகுதியால் சென்ற அரசடித் தீவைச் சேர்ந்த மோகன் (வயது 34) என்பவர்மீது இக்கும்பல் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதில் இவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

## 6 மீனவரை காணவில்லை

(சென்னை)

நாகபட்டினம் துறைமுகத்திலிருந்து இம்மாதம் 23 ஆம் திகதி இரண்டு இயந்திரப் படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற ஆறு மீனவர்கள் காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற் போன மீனவர்கள் இலங்கைக் கடற் பகுதிக்குச் சென்றிருக்கலாம் என்பதால், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பத்மா கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகருடன் தொடர்பு கொள்ளும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சிறிலங்காப் படையால் மீனவர் சுட்டுக்கொலை

மூதூர் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

கடந்த 24 ஆம் திகதி மாலை3மணியளவில்திருமலை மூதூர் உப்பூரலில் மீன்பிடிக்கச் சென்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையான மகாலிங்கம் ஆனந்தன் ( வயது 23 ) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இவர் நல்லூர் - மூதூர் பகுதியைச்சேர்ந்தவர் ஆவார்.

## தொழில்நுட்பக் கல்லூரியில் மாணவரிடையே கைகலப்பு
### "வரவேற்பின்" எதிரொலி

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் புதிய மாணவர்கள் சிலருக்கும் பழைய மாணவர்கள்சிலருக்கும் இடையேபெரும் கைகலப்பு இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. புதிய மாணவர்களை பழைய மாணவர்கள் "வரவேற்க" முயன்ற போதே இக்கைகலப்பு இடம் பெற்றதாகத் தெரியவருகின்றது.

நேற்று நண்பகல் அளவில் புதிய மாணவர்களை ராக்கிங் செய்ய பழைய மாணவர்கள் முயன்றதாகவும் இதனால் கைகலப்பு மூண்டதாகவும் அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்கள்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து கல்வி நெறியை முடித்துக் கொண்ட மாணவர்கள் எவரும் அனுமதி இன்றி தொழில் நுட்பக் கல்லூரிக்குள் செல்லக் கூடாது எனவும் "ராக்கிங்" முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதெனவும் மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புதிய மாணவர்கள் சிலரின்தொழில்நுட்பக் கல்லூரி அடையாள அட்டை பழைய மாணவர் சிலரால் அபகரிக்கப் பட்டதாகவும் சில தகவல்கள்தெரிவிக்கின்றன(நி

## குளத்தில் மூழ்கிய சகோதரர் பரிதாபகரமாக மரணம்

வட்டுக்கோட்டையில் மாடு மேய்க்கச் சென்ற சகோதரர்கள் இருவர் நேற்று முன்தினம் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்கள்.

செல்லத்துரை வினோதன் [வயது 11], செல்லத்துரை விக்கினராஜா [வயது 10] ஆகிய இரு சகோதரர்களுமே மரணமடைந்தவர்களாவர். இவர்கள் நேற்று முன்தினம் குளக்கரைப்பக்கம் மாடுமேய்க்கச் சென்றதாகவும் அவர்கள் வீடுதிரும்பாததை அடுத்து தாங்கள் தேடி அலைந்ததாகவும் நேற்றுக் காலை அவர்களது உடல்கள் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்த நிலையில் குளத்தில் இருந்து மீட்டதாகவும் தந்தையாரான செல்லத்துரை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இவர்கள் குளத்தில் விளையாட்டாக இறங்கியபோது சுழி இழுத்ததனால் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்திருக்கலாமென்றார்.

இறந்தவர்களது உடல்களை தமிழீழக் காவல்துறையின் சங்கானை பணிமனையினர் நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தனர் மரணவிசாரணையையும், பிரேதபரிசோதனையையும் அடுத்து உடல்கள் தந்தையிடம் ஒப்படைக்கப் பட்டது. [சி]

## காபூலில் ரொக்கட் தாக்கு 50பேர் பலி; 100 பேர் காயம்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் மத்திய பகுதியில் மூன்றுராக்கட் குண்டுகள் வெடித்ததில் 50 பேர் பலியானதுடன் 100 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தை ஊர்ஜிதம் செய்த பாதுகாப்புத்துறையினர் இத்தாக்குதலை கிழக்கு மத்தியாவில் போராளிகளே நடத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதனை கிழக்கு மத்தியா மறுத்துள்ளது.

## இந்தியா முழுவதும் பேரணி; பா. ஜனதாக் கட்சி அறிவிப்பு

இந்தியா முழுதுவதும் அடுத்த மாதம் பரவலாகப்பேரணிகளை நடாத்தப் போவதாக பாரதீய ஜனதாக் கட்சியினர் அறிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை தமது பேரணியை மத்திய அரசு தடுத்துள்ள போதும் தமக்கு பெருமளவில் ஆதரவு அதிகரித்து வருவதாகவும் இக்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

மத்திய அரசு பதவி விலக வேண்டும், இடிக்கப்பட்ட பாபர் மசூதியில்ராமர்கோவில் கட்டப்படல் வேண்டும் எனக் கோரியே அடுத்த மாதம் பேரணி நடாத்தப்படவுள்ளதாகவும் அக்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

## 'மெரினால்' இன்று வரும்

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற 'மெரினால்' என்ற கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இக்கப்பல் வந்தவுடன் பொருள்களைஇறக்கும்வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [க], [நி]

### வீரச்சாவு

வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் முரளிதாஸ் (கிருஷ்ணபிள்ளை கமலநாதன் - தம்பிலுவில், அம்பாறை) எனும் போராளிக்கு விடுதலைப்புலிகள்தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### சிறிலங்கா

தாகவும் தெரிவித்தார்.

இரு நாடுகளும் இரு துருவங்களாக இருந்தால் இதனால் பலர் நன்மை அடைவார்கள். இதனைக் கருத்தில் கொண்டே இவ்வாறு இணைந்து செயற்பட முடிவு செய்யப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு இவ்விருநாடுகளுக்கும் இடையேயுள்ள நெருக்கமான உறவினால் ஜெனீவாவில் நடைபெற இருக்கும் மனித உரிமைகள் மாநாட்டில் இந்தியா சிறிலங்காவிற்கு சார்பாக நடந்து கொள்ளும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## சீக்கிய தீவிரவாதி பொலிசாரால் கொலை

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் பலம்வாய்ந்த சீக்கிய தீவிரவாத குழுத்தலைவர் ஒருவரை அம்மாநிலத்தின் காவல் துறையினர் சுட்டுக் கொன்றுள்ளதாக இந்திய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

காலிஸ்தான் பிந்திரன்வாலி புலிப்படைஎனஅழைக்கப்படும் குழுவின் தலைவர் கூர்பஜன் சிங் மனோசகால் என்பவரே பஞ்சாப் காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார். இவர் 1000ற்கு மேற்பட்ட கொலைச்சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர் எனபொலிசார் தெரிவித்துள்ளதுடன் தாம் தீவிரவாதிகள் மீது நடாத்திய திடீர்தாக்குதலின் போதே கொல்லப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### ஈ. பி. டி. பி.

யாளர் திரு. சுவாக்காநோசு மறுத்துள்ளார்.

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்து யாழ். குடாநாட்டில் தங்கியுள்ள தீவகப் பகுதி மக்களை நேரில்சந்தித்த போது அவர்கள் முன்னைய ஆண்டுகளில் தீவகப் பகுதிகளை சிறிலங்கா இராணுவத்தினரும், ஈ.பி.டி. பி. யினரும் ஆக்கிரமித்திருந்த வேளையில் தாம்பட்ட துயரங்கள் விபரிக்க முடியாது எனக்கூறிய அவர்கள் அப்பகுதிகளிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினரும் அவர்களுக்கு ஒத்தாசைபுரியும் ஈ. பி. டி. பி. யினரும் வெளியேறும்வரை தாம் அங்கு செல்லப் போவதில்லை எனக் கூறினர் எனவும் தெரிவித்தார்.

### அம்பாறை

சசிரூபன் சசி (மாணிக்கம் சிவபாலராசா, சென்றல் காம்ப், கல்முனை) நேற்று அதிகாலை வீரச்சாவு அடைந்தார்.

இவ் இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### குண்டு வெடிப்பில் 23 பேர் காயம்

பிலிப்பைன்ஸ் சர்வதேச விமான நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பினால் 23 பேர் படுகாயமடைந்ததுடன் விமானநிலையக்கட்டடமும் பலத்த சேதமடைந்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நகரின் தெற்கிலுள்ள லங்கோவா நகரின் சர்வதேச விமான நிலையத்திலேயே இரு சக்திவாய்ந்த குண்டுகள் வெடித்தன.

### 3 மாத உணவு அனுப்ப பணிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று மாதங்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை உடனடியாக அனுப்பி வைக்கும்படி ஜனாதிபதி பிரேமதாசா உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார்.

மூன்றுமாத காலத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத்தில் களஞ்சியப் படுத்தும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### வெளி.

நடாத்தப்படும் என தெரிவிக்கப்பட்டபோதும் அதற்கான ஆயத்தங்கள் செய்யப்படவில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தையல் பொருள் கண்காட்சி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிகாமம் மேற்குப் பிரிவினரின் தையல் உற்பத்திப் பொருள்களின் விற்பனையும் கண்காட்சியும் வரும் ஆறாம் ஏழாம் திகதிகளில் காலை ஒன்பது மணி முதல் மாலை ஐந்து மணிவரை வட்டுக் கோட்டை திருஞான சம்பந்தர் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. பல செஞ்சிலுவை மற்றும் முக்கியஸ்தர்கள் நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளுகிறார்கள். (20)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 28-02-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 8426

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

24-4323, 24-4350, 27-2088, 27-9772, 26-6077,
24-4303, 27-4019, 27-1122, 26-1349, 41-3931,
42-9628, 24-5127, 40-7299, 24-9856, 24-5734,
42-3964, 42-1046, 24-1040, 24-3897, 27-6692,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்

42-2364, 27-9305, 24-4238, 24-5137, 24-6972

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.